**In the Court of the Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | |
|---|---|---|---|
| **Case No.** | : **CC 30/2021** | | |
| **PW/DW/CW** | : **PW2** | | |
| **Name** | : **ஜெயச்சந்திரன்** | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : ராமன் | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

(Accused absent petition filed and allowed )

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12.11.2025

---

**முதல் விசாரணை**

நான் A. இராமநாதபுரத்தில் வசித்து வருகிறேன். ஒசூரில் முறுக்கு தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகள் ஆவார். 1வது எதிரி கதீஸ்குமார் மருமகன் ஆவார். 2வது எதிரி சகுந்தலா 1வது எதிரியின் தாயார் ஆவார். 3வது எதிரி 1வது எதிரியின் சகோதரி ஆவார். 4வது எதிரி 3வது எதிரியின் கணவர் ஆவார். கடந்த 2012ம் வருடம் எனது மகளுக்கும் 1வது எதிரிக்கும் திருமணம் நடந்தது. திருமணத்தின் போது எதிரிகள் 50 பவுன் நகையும், இரண்டு லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களும் கேட்டார்கள். அதற்கு நான் தற்போது 25 பவுன் நகையும், 3 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களும் கொடுத்தேன். மீத நகைகளை பின்னாடி செய்கிறேன் என்று சொன்னேன். அதன்பின்பு எனது மகளுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தது. பின்னர் கடந்த 2019ம் ஆண்டு குழந்தைகளுக்கு காதுகுத்து விழா வைத்தார்கள். அந்த விழாவிற்கு நான் 1 லட்சம் மொய் மற்றும் 1 பவுன் நகை, செலவு ரூபாய் 50000/- செய்தேன். பின்னர் மேற்படி விழாவில் வந்த மொய் பணத்தை வைத்து உசிலம்பட்டியில் 1வது எதிரி 5 செண்டு இடம் வாங்கினார். அந்த

இடத்தில் வீடு கட்டுவதற்காக எனது மகளிடம் 25 பவுன் நகை கேட்டு தொந்தரவு செய்தார். இதனால் எனது மகளுக்கும் எதிரிகளுக்கும் தகராறு ஏற்பட்டது. அப்போது எதிரிகள் அனைவரும் சேர்ந்து எனது மகளை அடித்து விட்டை விட்டு விரட்டி விட்டார்கள். பின்னர் நான் விசாரித்து ஆட்களை வைத்து எதிரிகளிடம் பேசினேன் ஆனால் அவர்கள் பேசவில்லை. பின்னர் நான் ஒசூருக்கு எனது மகளையும் எனது பேரன்களையும் அழைத்து சென்றுவிட்டேன். 2021 ம் ஆண்டு ஒன்றரை வருடம் கழித்து தங்கசாமி, கல்யாணி, ராமு ஆகியோர்களை வைத்து எதிரியிடம் பேச்சுவார்த்தை நடத்தினோம். மேற்படி பேச்சுவார்த்தையில் எதிரிகள் அவர்கள் கேட்ட 25 பவுன் நகையை கொடுத்தால் தான் எனதுமகளை 1வது எதிரியுடன் சேர்ந்து வாழ வைக்க முடியும் என்றும், இல்லையென்றால் ஒன்னும் செய்ய முடியாது என்று கூறினார்கள். மேலும் அதில் ஏற்பட்ட தகராறில் எதிரிகள் எங்களை பார்த்து அவுசாரி தேவடியா என்று அசிங்கமான வார்த்தையால் பேசினார்கள். இதுசம்பந்தமாக எனது மகன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை**

S.d. Jeyachandran
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti